**நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**
**முன்னிலை: திரு.எஸ்.சக்திநாராயணமூர்த்தி பி.எஸ்.சி., எல்.எல்.பி.,**
**நீதித்துறை நடுவர், அறந்தாங்கி.**
**2026 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 11 ஆம் நாள் புதன்கிழமை**

**STC No.544/2023**

| | | |
|---|---|---|
| 1. | **குற்றமுறையீட்டாளர்** | : அரசுக்காக: காவல் ஆய்வாளர்,<br>நாகுடி காவல் நிலையம்.<br>குற்ற எண்.196/2022. |
| 2. | **குற்றம் சாட்டப்பட்டவர் பெயர் மற்றும் விலாசம்** | : ராஜமன்னன்,<br>த/பெ. நடேசன்.<br>**எதிரியின் முகவரி:**<br>கீழக்குடியிருப்பு,<br>சுப்பிரமணியபுரம் அஞ்சல்,<br>அறந்தாங்கி தாலுகா,<br>புதுக்கோட்டை மாவட்டம். |
| 3. | **குற்றம் நடந்த நாள்** | : 18.09.2022 |
| 4. | **புகார் அளிக்கப்பட்ட நாள்** | : 20.09.2022 |
| 5. | **முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள்** | : 20.09.2022 |
| 6. | **குற்றஞ்சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்ட நாள்** | கைது செய்யப்படவில்லை |
| 7. | **குற்றஞ்சாட்டப்பட்டவர் பிணையில் வந்த நாள்** | கைது செய்யப்படவில்லை |
| 8. | **குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்** | 31.01.2023 |
| 9. | **குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக வனையப்பட்ட குற்றச்சாட்டு** | **இ.த.ச பிரிவுகள்** 279, 338 of IPC |
| 11. | **வழக்கு விசாரணை தொடங்கப்பட்ட நாள் மற்றும் முடிக்கப்பட்ட நாள்** | : 19.02.2026–05.03.2026 |

| | **முதல் விசாரணை** | **குறுக்கு விசாரணை** |
|---|---|---|
| PW1 | – 19.02.2026 | 19.02.2026 |
| PW2 | – 19.02.2026 | 19.02.2026 |
| PW3 | – 05.03.2026 | 05.03.2026 |

| | | |
|---|---|---|
| **12. நீதிமன்றத்தின் முடிவு** | : | எதிரியின் மீதான இ.த.ச பிரிவுகள் 279, 338 of IPC இன் கீழுமான குற்றச்சாட்டு அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யபடவில்லை என முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| **13. வழக்கு சொத்து** | : | ஏதுமில்லை |

இவ்வழக்கு என் முன்பாக இறுதியான விசாரணைக்காக வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–II அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கு.இராம்குமார் B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்து இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்.....

**<u>தீர்ப்புரை</u>**

அரசு தரப்பில் எதிரியின் மீது இந்திய தண்டனைச்சட்டம் பிரிவுகள் U/s. இ.த.ச பிரிவுகள் 279, 338 of IPC இன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டு குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

***இனிமுதற்கொண்டு இந்திய தண்டனைச்சட்டம் என்பது இ.த.ச. என்றும், குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் என்பது கு.வி.மு.ச. என்றும் அழைக்கப்படும்.***

**<u>1) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதியறிக்கையின் சுருக்கம்:</u>**

கடந்த 18.09.2022–ம் தேதி 18.30 மணிக்கு சுப்பிரமணியபுரம் பெட்ரோல் பங்க் அருகே இவ்வழக்கின் வாதி தனக்கு சொந்தமான TN 55 AZ 8571 என்ற பதிவெண் கொண்ட TVS SPORT வாகனத்தில் சுப்பிரமணியபுரம் சென்று மாத்திரை வாங்கிவிட்டு வீட்டிற்கு வருவதற்காக கிழக்கில் இருந்து மேற்குநோக்கி வந்து கொண்டிருந்தபோது, வாதிக்கு எதிரே வந்த வழக்கின் எதிரி அவருக்கு சொந்தமான TN 65 W 8786 என்ற

எண்ணுள்ள HONDA SHINE வாகனத்தை மேற்கிலிருந்து, கிழக்குநோக்கி அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டிவந்து வாதி வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார். இதில் வாதிக்கு வலது கால் தொடையிலும், வலது பக்க முன்னங்கையிலும், இடது பக்க முழங்கை முழங்காலில் இரத்த காயம் ஏற்பட்டுள்ளது. எனவே, எதிரியின் செய்கையானது இ.த.ச பிரிவுகள் 279, 338 of IPC–ன் கீழ் தண்டிக்கதக்க குற்றம் என நாகுடி காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2) வழக்கினை கோப்பிற்கு எடுத்தல், அழைப்பாணை, நகல் வழங்குதல் :**

இந்நீதிமன்றத்தால் அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதியறிக்கை மற்றும் வாக்குமூலங்கள், ஆவணங்கள் போன்றவைகளை கவனமாக பரிசீலனை செய்ததில், எதிரிக்கு எதிராக முதல் தோற்ற வழக்கு உள்ளதென இந்நீதிமன்றம் கருதியதால், வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு **கு.வி.மு.ச. பிரிவு 204** இன் கீழ் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டது.

அழைப்பாணையின் பேரில் எதிரி ஆஜரானதும், **கு.வி.மு.ச. பிரிவு 207** இன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழக்கு ஆவணங்கள் வழங்கப்பட்டது.

**3) குற்றச்சாட்டு வனைதல் மற்றும் எதிரிகளின் பதில் :**

பின்பு எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் இ.த.ச பிரிவுகள் 279, 338 of IPC இன் கீழ் எதிரி மீது குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்திரம் உள்ளதென கருதியதால், எதிரி மீது **கு.வி.மு.ச. பிரிவு 240(1)** இன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டது. மேற்படி குற்றச்சாட்டு குறித்து **கு.வி.மு.ச. பிரிவு 240(2)** இன் கீழ் எதிரியிடம் தமிழில் விளக்கி கூறி வினவிய போது, எதிரி பொய் வழக்கு என்று மறுத்துரைத்து வழக்கு விசாரணைக்கு வேண்டுரைத்தனர். எனவே இந்நீதிமன்றமானது **கு.வி.மு.ச. பிரிவு 242(1)** இன் கீழ் அரசு தரப்பு சாட்சியத்திற்கு உத்தரவிட்டது.

**4) அரசு தரப்பு சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் :**

**4.1) அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.3** வரையிலான சாட்சியங்களும், **அ.சா.ஆ.1 முதல் 6** வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. சான்று பொருட்கள் இல்லை.

**4.2)** அரசு தரப்பில் **அ.சா.1** ஆக கார்த்திக் என்பவர் விசாரிக்கப்பட்டு அவர் மூலம் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்பட்டும், **அ.சா.2** ஆக முத்துக்குமார் என்பவர் விசாரிக்கப்பட்டும், **அ.சா.3** ஆக பால்ராஜ் என்பவர் விசாரணை செய்யப்பட்டு, அவர் மூலம் **அ.சா.ஆ.2** ஆக முதல் தகவல் அறிக்கை குறியீடு செய்யப்பட்டும், மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்பட்டும், **அ.சா.ஆ.4** ஆக பார்வை மகஜரானது குறியீடு செய்யப்பட்டும், காயச்சான்று **அ.சா.ஆ.5** ஆகவும் குறியீடு செய்யப்பட்டும், மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை. சான்றுப் பொருட்கள் இல்லை.

**5) கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b) இன் கீழான வினா மற்றும் எதிரிகள் தரப்பு சாட்சியம்:**

அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிக்கப்பட்டவுடன் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றுகின்ற அம்சங்கள் குறித்து எதிரியிடம் **கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ)** இன் கீழ் விளக்கி வினவியபோது, எதிரி பொய் வழக்கு என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் பதிலுரைத்ததால், எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**6) அரசு தரப்பு மற்றும் எதிரிகள் தரப்பு வாதம்:**

இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது.

**7) இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரியின் மீதான இ.த.ச பிரிவுகள் 279, 338 of IPC இன் கீழுமான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா ? என்பதே ஆகும்.**

**8) சாட்சியங்களின் பரிசீலனை மற்றும் பகுப்பாய்வு:**

9) இருதரப்பு வாதங்களும் வழக்கின் சாட்சியங்களும், சான்றாவணங்களும் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

10) எதிரியின் மீதான இ.த.ச பிரிவுகள் 279, 338 of IPC இன் கீழுமான குற்றச்சாட்டுக்கள் குறித்த அரசு தரப்பு சாட்சியங்கள் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான **அ.சா.1 கார்த்திக்** என்பவர் தனது முதல் விசாரணையில்,

> ***"கடந்த 18.09.2022 ஆம் தேதி மாலை சுமார் 06.30 மணியளவில் நான் எனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் சுப்பிரமணிபுரம் இந்தியன் பெட்ரோல் பங்க் அருகில் சாலையில் இடதுபுறமாக சென்று கொண்டிருந்த போது எனக்கு வலதுபுறமாக இருசக்கர வாகனத்தில் வந்த நபர் என் மீது மோதிவிட்டார். அவர் யார் என்று எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. பின்னர் எனக்கு விபத்தில் காயம் ஏற்பட்டதால் நான் அறந்தாங்கி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் அளித்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிஸ்சார் என்னை விசாரித்தனர். நடந்த விவரம் பற்றி சொன்னேன்"***

என மேற்கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

மேற்படி முதல் விசாரணையில் சாட்சியமளித்துவிட்டு, எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையில், எதிரி வாகனத்தினை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை இயக்கவில்லை என்றால், சரிதான். விபத்து நடந்ததாக கூறப்படும் நேரம் இரவு நேரம் என்பதால் எதிரியை நான் அடையாளம் காணவில்லை என்றால், சரிதான் என்று சாட்சியமளித்துள்ளார். எனவே,

அ.சா.1 அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்காமல் முரண்பட்டு சாட்சியமளித்துள்ளது தெரிய வருகிறது. அதேபோல், அ.சா.2—ம் அரசு தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாக மாறியுள்ளார்.

11) மேலும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக வேறு ஏதேனும் சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளதா என்பதை பரிசீலனை செய்து பார்க்கையில், வேறு யாரும் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை. இவ்வழக்கின், சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் இரு தரப்பு வாதங்கள் இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. அரசு தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில் எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், வழக்கு சம்பவத்தை நிரூபிக்கும் வகையில் வேறு யாரும் சாட்சிகளாக விசாரிக்கப்படவில்லை. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக பிறழ் சாட்சியாக மாறி சாட்சிமளித்துள்ளனர். மேலும், அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ள காவல் ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை மற்றும் பார்வை மகஜர், மாதிரி வரைபடம், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை குறித்து சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.3 காவல் ஆய்வாளரின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு வழக்கு சம்பவம் நிரூபிக்கப்பட்டதாக கருத இயலாது என்று இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது. மேலும், எதிரியின் மீதான இ.த.ச பிரிவுகள் 279, 338 of IPC—ன் கீழுமான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பால் தகுந்த சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் சரிவர நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யலாம் என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**இறுதியாக,** எதிரியின் மீதான இ.த.ச பிரிவுகள் 279, 338 of IPC இன் கீழுமான குற்றச்சாட்டு அரசு தரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யபடவில்லை என முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

அ) வழக்கு சொத்து ஏதும் இல்லை என்பதால் வழக்கு சொத்து குறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

ஆ) இந்த வழக்கில் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு எதிரியால் எழுதி கொடுக்கப்பட்ட பிணையப் பத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**<u>சாட்சி மற்றும் சான்றாவணப்பட்டியல் :</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :</u>**

| | | |
|---|---|---|
| **அ.சா.1** | : | கார்த்திக் |
| **அ.சா.2** | : | முத்துக்குமார் |
| **அ.சா.3** | : | பால்ராஜ் |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>**

| | | |
|---|---|---|
| **அ.சா.ஆ.1** | : | புகார் வாக்குமூலம் |
| **அ.சா.ஆ.2** | : | முதல் தகவல் அறிக்கை |
| **அ.சா.ஆ.3** | : | மாதிரி வரைபடம் |
| **அ.சா.ஆ.4** | : | பார்வை மகஜர் |
| **அ.சா.ஆ.5** | : | காயச்சான்று |

**அ.சா.ஆ.6** : மோட்டார் வாகன ஆய்வறிக்கை

**அ.சா.ஆ.7** : மோட்டார் வாகன ஆய்வறிக்கை

**அ.சா.ஆ.8** : சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

**சான்று பொருள் :** இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை.

**பின்குறிப்பு :**

1. இவ்வழக்கில் சாட்சிகள் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேலாக நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் எதிரிக்கு விசாரணையின்போது பிணையில் இருந்தார்.
3. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு அறிவிக்கப்பட்டது.

**ஒம்/—எஸ்.சக்திநாராயணமூர்த்தி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**//உண்மை நகல்//**

SAKTHINARAYANA MOORTHI S

Digitally signed by SAKTHINARAYANA MOORTHI S
Date: 2026.03.11 04:56:44 +0530

**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**